www.Padasalai.Net www.TrbTnpsc.com

VNR6T

விருதுநகர் மாவட்டம்

தொகுத்தறித் தேர்வு - 2025

வகுப்பு 6

கால அளவு: 2.00 மணிநேரம் | தமிழ் | மதிப்பெண்கள்: 60

பகுதி-1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **6×1=6**

1) கலைக்கூடமாகக் காட்சி தருவது .........

அ) சிற்பக்கூடம் ஆ) ஓவியக்கூடம் இ) பள்ளிக்கூடம் ஈ) சிறைக்கூடம்

2) பரிசுபெறும் போது நம் மனநிலை ............. ஆக இருக்கும்

அ) கவலை ஆ) துன்பம் இ) மகிழ்ச்சி ஈ) சோர்வு

3) மணிமேகலை கையில் இருந்த அமுதசுரபியில் உணவு இட்ட பெண் ...........

அ) சித்திரை ஆ) ஆதிரை இ) காயசண்டிகை ஈ) தீவதிலகை

4) காரணப்பெயரை வட்டமிடுக

அ) மரம் ஆ) வளையல் இ) சுவர் ஈ) யானை

5) 'எளிதாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) எளிது + தாகும் ஆ) எளி + தாகும்

இ) எளிது + ஆகும் ஈ) எளிதா + ஆகும்

6) அன்னை தெரசாவிற்கு ........... க்கான 'நோபல் பரிசு' கிடைத்தது

அ) பொருளாதாரம் ஆ) இயற்பியல் இ) மருத்துவம் ஈ) அமைதி

**ஆ) பொருத்துக** **4×1=4**

7) இலக்கிய மாநாடு - பாரதியார்

8) தமிழ்நாட்டுக் கவிஞர் - குழந்தைகள் உரிமைக்குப் பாடுபட்டவர்

9) வள்ளலார் - சென்னை

10) கைலாஷ் சத்யார்த்தி - பசிப்பிணி போக்கியவர்

பகுதி-2

**இ) ஓரிரு சொற்களில் விடையளிக்க. (எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்)** **5×2=10**

11) காந்தியடிகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வைக் கூறுக

12) சொல் என்றால் என்ன?

13) உழைக்கும்போது என்னவாக ஆகிறோம்?

14) 'கோமுகி' என்பதன் பொருள் யாது?

15) ஈகை பற்றி வள்ளுவரின் கருத்து யாது?

16) அரசனாலும் செய்ய முடியாத செயல் எது?

17) உயர்வு நவிற்சி அணி என்பது யாது?

**ஈ) ஓரிரு தொடர்களில் விடையளிக்க. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)** **3×4=12**

18) காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக

19) நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு மாணவர்கள் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக.

20) மணிபல்லவத்தீவு எவ்வாறு காட்சி அளித்தது?

21) அறுவகைப் பெயர்ச்சொற்களுக்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

22) எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழப் புத்தர்பிரான் கூறும் அறிவுரைகள் யாவை?

23) கைலாஷ் சத்யார்த்தி நோபல் பரிசு பெறத் தூண்டுகோலாக அமைந்த இளமைக்கால நிகழ்வு யாது?

## பகுதி-3

**உ) அடிபிறழாமல் எழுதுக** **4+2=6**

24) 'தம் உயிர்போல்' மற்றும் 'எல்லாரும்' எனத் தொடங்கும் பராபரக் கண்ணி பாடல்களை எழுதுக

25) 'மனத்துக்கண்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக

## பகுதி-4

**ஊ) பின்வரும் வினாக்களுக்கு விடையளி (எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்)** **5×2=10**

26) **தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக**

அ) ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்

ஆ) அது ஒரு இனியபாடல்

27) **தொடர்களில் உள்ள பெயர்ச்சொற்கள் எவ்வகைப் பெயர்கள் என எழுதுக**

அ) இறைவனைக் கை தொழுதேன்

ஆ) நான் மதுரைக்குச் சென்றேன்

28) **ஒலி வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

அரம் - அறம்

29) **இருபொருள்தருக**

அ) திங்கள் ஆ) நகை

30) **இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக**

வறியார்க்குஒன்று ஈகைமற்று ஈவதே எல்லாம்

குறியெதிர்ப்பை உடைத்து நீரது

31) **ஏதேனும் ஒரு தலைப்பில் கவிதை எழுதுக**

அ) நட்பு ஆ) உதவி

32) **கலைச்சொல் தருக**

அ) Literature ஆ) Humanity

## பகுதி-5

**எ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க.** **1×6=6**

33) பாதம் கதையைச் சுருக்கி எழுதுக

34) வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக

**ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க.** **1×6=6**

35) நூல்கள் அனுப்ப வேண்டிப் பதிப்பகத்தாருக்குக் கடிதம் எழுதுக

36) 'தேசிய ஒருமைப்பாடு' - கட்டுரை எழுதுக

- - - - - - -

www.Padasalai.Net